**செய்தி வெளியீடு எண்: 142** **நாள் : 01.03.2016**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (1.3.2016) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் சென்னை அண்ணாநகரில் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அண்ணா வளைவு அருகில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 106 கோடியே 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 பாலங்கள், 2 இரயில்வே மேம்பாலங்கள், 1 இரயில்வே கீழ்ப்பாலம், 2 அலுவலகக் கட்டடங்கள், 1 ஒருங்கிணைந்த தலைமைப் பொறியாளர் குடியிருப்பு ஆகியவற்றை திறந்து வைத்து, 1354 கோடியே 78 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான பாலங்கள், மேம்பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் சாலை பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

ஒரு மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளில் சாலைக் கட்டமைப்பு வசதி மிகமுக்கிய பங்கினை வகிக்கிறது. சாலைக் கட்டமைப்பு வசதியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தேவைக்கேற்ப மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், சாலைகள் மற்றும் பாலங்களைப் பராமரித்தல், போன்ற பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது .

அந்த வகையில், சென்னை, அண்ணாநகர், அண்ணா வளைவு அருகில் ஈ.வெ.ரா. சாலையை நெல்சன் மாணிக்கம் சாலையுடன் இணைக்கும் 361 மீட்டர் நீளம் கொண்ட 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இப்புதிய சாலை மேம்பாலமானது, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அண்ணாநகர், அமைந்தக்கரை, என்.எஸ்.கே நகர், கோயம்பேடு ஆகிய சாலைப் பகுதிகளில் உள்ள போக்குவரத்து நெரிசலைச் சீர்செய்து போக்குவரத்து மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருக்கும்.

மேலும் காஞ்சிபுரம் மாவட்டம் – குன்னப்பட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; ஈரோடு மாவட்டம் – கராச்சிகோரையில் கட்டப்பட்டுள்ள பாலம்; திருப்பூர் மாவட்டம் – மலையாண்டிப்பட்டினத்தில் கட்டப்பட்டுள்ள பாலம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – பொன்நகரில் இரயில்வே கடவு எண். 1136 –க்கு மாற்றாக திண்டுக்கல் கரம் முதல் சுழல் அமைப்பு வழியாக திருச்சிராப்பள்ளி இரயில்வே சந்திப்பு வரை கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம்; இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடியில் இரயில்வே கடவு எண். 473 –க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம்; சேலம் மாவட்டம் – சூரமங்கலத்தில் இரயில்வே கடவு எண். 113 –க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட இரயில்வே கீழ்ப்பாலம்;

சென்னை – கிண்டியில் கட்டப்பட்டுள்ள முதன்மை இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர்களுக்கான ஒருங்கிணைந்த குடியிருப்புகள்; திருநெல்வேலி மாவட்டம் – தென்காசியில் கட்டப்பட்டுள்ள தரக்கட்டுப்பாடு உட்கோட்ட அலுவலகக் கட்டடம்; பெரம்பலூர் மாவட்டம் – பெரம்பலூரில் கட்டப்பட்டுள்ள தரக்கட்டுப்பாடு உட்பிரிவு அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் 141 கோடியே 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அண்ணா வளைவு மேம்பாலம், பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள், இரயில்வே கீழ்ப்பாலம், குடியிருப்பு மற்றும் அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டம் – கீழ்கட்டளையில் மேம்பாலம்; காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூர் – மாம்பாக்கம் – கேளம்பாக்கம் சாலையில் NH-45 சந்திப்பில் மேம்பாலம்; சேலம் மாவட்டம் – குரங்குச்சாவடி மற்றும் ஏ.வி.ஆர். ரவுண்டானா சந்திப்புகளுக்கு இடையில் மேம்பாலம்; திருவாக்கவுண்டனூர் ரவுண்டானா சந்திப்பில் மேம்பாலம்; தருமபுரி மாவட்டம் – பாப்பிரெட்டிப்பட்டியில் வாணியார் ஆற்றின் குறுக்கே பாலம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருச்சிராப்பள்ளியில், சென்னை – திருச்சிராப்பள்ளி – திண்டுக்கல் சாலை கி.மீ. 327/8,10ல் கூடுதல் இருவழித்தடம் கொண்ட பாலம்; தஞ்சாவூர் மாவட்டம் – மதுக்கூரில் பாலம்; புதுக்கோட்டை மாவட்டம் – சித்திராம்பூரில் பாம்பாற்றின் குறுக்கே பாலம்;

வண்டலூர் முதல் வாலாஜாபாத் வரையிலான (கி.மீ.30/400 – 47/000) நான்கு வழிச்சாலையினை ஆறு வழிச்சாலையாக மேம்படுத்தும் பணி; மதுரை மாவட்டம் – மதுரை

சுற்றுச் சாலை (கி.மீ.0/0 – 27/2) இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தும் பணி; திருவள்ளூர் மாவட்டத்தில், **485** கி.மீ. மாநில சாலைகள் மற்றும் **278** கி.மீ. மாவட்ட முக்கிய சாலைகளை செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தப்படி ஐந்து ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணி;

தருமபுரி மாவட்டம் – குமரசம்பட்டியில் இரயில்வே கடவு எண். **43** –க்கு மாற்றாக இரயில்வே மேம்பாலம், முத்து கவுண்டன் கோட்டையில் இரயில்வே கடவு எண். **46**–க்கு மாற்றாக இரயில்வே மேம்பாலம்; மதுரை மாவட்டம் – எல்காட் சிறப்பு பொருளாதார மண்டலத்தின் வழியாக செல்லும் மதுரை – போடிநாயக்கனூர் இரயில்வே வழித்தடத்தில் மதுரை – தேனி தேசிய நெடுஞ்சாலைக்கு (NH–49) இணையாக வடபழஞ்சியில் அமைக்கப்படவுள்ள ரயில்வே மேம்பாலம்;

என மொத்தம் **1354** கோடியே **78** லட்சத்து **70** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பாலங்கள், மேம்பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள், சாலைப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி, தலைமைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., நெடுஞ்சாலை துறை முதன்மை இயக்குநர் திரு. கோ.அர. இராசேந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – **9.**
நாள் : **1.3.2016**